விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY,

மலர் 29 வைகாசி 5 றம்ழான் 20 இதழ் 89

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-5-1987

'சியாய் மாச்செட்டி' பொம்மர்களுக்கு

## இயந்திரத் துப்பாக்கி, ஏவுகணை, கூடுதல்

## குண்டுவீச்சு வசதிகள் இணைப்பு!

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் ஆகாயத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படும் 'சியாய் மாச்செட்டி (Siai Marchetti) என்ற பொம்மர் குண்டுவீச்சு விமானங்களுக்கு அதிசக்தி வாய்ந்த இயந்திரத்துப்பாக்கிகளும் ஏவுகணைகளும், மேலதிக குண்டுவீச்சு வசதிகளும் பொருத்தப்படவுள்ளன.

இந்த இத்தாலிய தயாரிப்புக்குண்டு வீச்சு விமானம் இருவிமானிகள் அமரக்கூடிய இருக்கை வசதிகளைக் கொண்டது.

இலங்கை விமானப்படையிடம் இந்த ரகத்தைச் சேர்ந்த ஆறு விமானங்கள் இருக்கின்றன இவற்றுடன் மேலும் இந்த ரக மூன்று விமானங்களை விரைவில் கொள்வனவு செய்து இவற்றின் எண்ணிக்கையை ஒன்பதாக அதிகரிக்க இலங்கை அரசு முடிவுசெய்துள்ளது.

இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்களில் இவை திறமை மிக்கவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'சியாய் மாச்செட்டி' பொம்மர் குண்டுவீச்சு விமா

(5-ம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவில் தனியார்பஸ்மீது தாக்குதல்: பலர்பலிஎன அச்சம்!

(நமது அலுவலக நிருபர்)

**ஆனையிறவு தடைமுகாம் அருகில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற தனியார் பஸ்வண்டி ஒன்றின் மீது நேற்றுக் காலை தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதில் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. ஆயினும் ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் சுமார் 5 பேர்வரை இறந்திருக்கலாமெனத் தெரிவிக்கின்றன.**

நேற்றுக்காலை ஏழு மணியளவில் தனியாருக்குச் சொந்தமான பஸ் ஒன்று சிறுவர் பெண்கள், ஆண்கள் உட்பட நாற்பத்தைந்து பிரயாணிகளுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

ஆனையிறவு இராணுவமுகாமருகில் சென்றதும் இப்பஸ் மீது ஷெல் தாசகுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது இத்தாக்குதலில் அப்பஸ்ஸில் பயணம் செய்த பிரயாணிகளில் பலர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது சிலர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்ட து

யாழ்ப்பாணத்திலிருந்து முதலில் புறப்பட்ட இப்பஸ் பளையை அடைந்ததும் ஆனையிறவுக்கு அப்பால் செல்ல வேண்டாமென சில இளைஞர்கள் இப்பஸ்ஸை தடுத்தனராம். ஆனல் இத்தடையையும் மீறி அந்தபஸ் ஆனையிறவுக்குச் சென்றதாக தெரியவருகிறது.

இப் பஸ் தாக்குதலில் காயமடைந்த பயணிகளில் பலர் இராணுவ ஹெலிகாப்டர் மூலம் வவனியா கொண்டு செல்லப்பட்டனர் என்றும் கூறப்பட்டது

இத்தாக்குதலில் சுமார் 5 பயணிகள் கொல்லப்பட்டிருக்கலாமென ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

### அரசு அறிவிப்பு

இதேவேளை அரசாங்கம் இப் பஸ் தாக்குத்ல் குறித்து தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிவந்து கொண்டிருந்த பிரயாணிகள் பஸ்ஸொன்று ஆனையிறவில்சிப்பாய்கள் இட்ட உத்தரவையும் மீறிச் சென்றதையடுது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒரு பயணி கொல்லப்பட்டார். ஐவர் காயமடைந்தனர்.

துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டு பஸ்பலவந்தமாகவே நிறுத்தப்பட்டது என்றும் அரச அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது காயமடைந்தவர்கள் வவனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பொம்மர் குண்டுவீச்சு

(அலுவலக நிருபர்)

அரியாலை, நாவற்குழி பகுதிகளில் நேற்று மாலை 5-30 மணியளவில் பொம்மரிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

இரு பொம்மர்கள் திடீரென இக்குண்டு வீச்சில் இறங்கின.

கிழக்கரியாலை வீதியில் பொம்மரிலிருந்து போடப்பட்டகுண்டு வெடித்ததினல் பாரியகுழிகள் காணப்படுகின்றன.

நாவற்குழியில் பொம்மரிலிருந்து வீசப்பட்ட குண்டு வெடித்து சில கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. [ஒ]

அமெரிக்க கப்பல் மீது தாக்குதல்:

## 25 பேர் பலி!

பாக்தாத், மே 18

வளைகுடாவில் நேற்று அமெரிக்க யுத்தக் கப்பலொன்றின் மீது ஈராக்கினல் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் குறைந்தது 28 கடற்படையின்ர் கொல்லப்பட்டனர்; 25 பேர் காயமடைந்தனர்.

இது தவருக நிகழ்ந்துவிட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## படையினர் போராளிகள் இரண்டரைமணிநேரமோதல்

யாழ்ப்பாணம், செவ்

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேவந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று சுமார் இரண்டரை மணிநேரம்வரை பலத்த மோதல் நடைபெற்றது.

நேற்றுக் காலை பத்து மணியளவில் இம்முகாமிலிருந்து வெளியேறிய படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினுர்கள்.

இராணுவத்திற்கு உதவியாக இரு ஹெலிகாப்டர்கள் விடுதலைப் புலிகளை நோக்கித் தாக்குதல் நடத்தியதுடன் முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

[8-ம் பக்கம் பார்க்க]

கோப்பாய் பாலவெளியில்

## ஹெலிசூட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர் பலி!

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாய் பாலத்தில் நேற்றுக்காலை ஹெலிகாப்டர் ஒன்று தாழப்பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரில் ஒருவர் ஸ்தலத்திலேயே கோரப்பலியானுர். மற்றவர் படுகாயமடைந்தார்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ர ஜன் [25 வயது] என்பவரே இறந்தவராவார். சி. ராமச்சந்திரன் [வயது 45] என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்

(5-ம் பக்கம் பார்க்க)

## மலைநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்!

### 'தலதா'வைச்சுற்றி பாதுகாப்பு வலயம்

கொழும்பு, திங்கள்

மலைநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கையொன்று தெரிவிக்கிறது

கண்டியில் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் தற்போது சோதனைக் குட்படுத்தப்பட்டு வருகின்றன. பௌத்தர்களின் புனித ஸ்தலமான தலதா மாளிகையைச் சுற்றியுள்ள பிரதேசம் பாதுகாப்புவலையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்

கண்டிக்கு நேற்று விஜயம செய்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித்அத்துலத்முதலி இப்பாதுகாப நடவடிக்கைகளைபங்ர்வையிட்டார்

அண்மைக்காலமாக நுவரெலியா கலவாக்கொலைஆகிய இடங்களில்பாதுகாப்பு நடவடிக்கைக தீவிரப்படுத்தப்பட்டுள்ளதும் பல இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

## இரத்மலானை தீவிபத்தில் வடபகுதிரயிலில்இணைக்கப்பட இருந்தபெட்டிகள் சேதம்!

கொழும்பு, திங்கள்

இரத்மலானை ரயில்வே வேலைத்தளத்தில் புதிதாகச் செப்பனிடப்பட்டு வடபகுதி யாழ்தேவி ரயிலுடன் இணைக்கப்படுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த புகையிரதப் பெட்டிகள் நேற்று இங்கு ஏற்பட்ட தீயினல் முற்ருகச் சேதமடைந்துள்ளன. இதனல் ரயில்வேத்

(8-ம் பக்கம் பார்க்க)

## மத்திய கல்லூரி, வேம்படி

### மீண்டும் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியன நேற்று இரண்டாம் தவணைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன

எழுபத்தைந்து வீதமான மாணவர்கள் நேற்று இக் கல்லூரிகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

பாடசாலைகள் யாவும் வழமை போல் நடைபெற்றன. [ஒ]

இலங்கை பிரச்னை: புதுடில்லியில்

## பேச்சுக்கள் தொடருகின்றன

### போராளிகள் நாளை அழைக்கப்படலாம்?

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகஇலங்கைத் தமிழ் அரசியல் பிரிவுகளுடன் இந்தியஅரசு ஆரம்பித்துள்ளபேச்சுவார்த்தைகள்நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளன.

இந்திய இணையமைச்சர்களான திரு. நட்வர்சிங் திரு. பி சிதம்பரம், வெளியுறவுச் செயலாளர்திரு கே. பி எஸ். மேனன் ஆகியோரை தமிழர் விடுதலைக்கூட்டணிஉறுப்பினர்கள் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வுகாண்பதுதொட

(5-ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக மின்சாரம எடுத்தவர்மின்தாக்கிமரணம்

வேலணை, திங்கள்

சட்டவிரோதமாக வீட்டுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முயன்ற ஏழு பிள்ளைகளின் தந்தையான ஒருவர் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தார்.

கடந்த 17ம் திகதி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பன் கிழக்குப் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

மரணத்தைத் தழுவிக் கொண்டவர் கிருஷ்ணர் நாக

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், கட்டில் மெத்தைகள், அல்மாரிகள் சாப்பாட்டுமேசை கதிரைகள், Pyrex, டின்னர் செற், ரீ செற், கிளாஸ்வகைகள், Show case. கண்ணுடி மேசைகள், Waffle Iron, பிஸ்கட் மேக்கர், கலர் சோஸ்பான்ஸ், மற்றும் பல உடன் மலிவுவிலையில்விற் னேக்குண்டு. M.தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.சென் பற்றிக்ஸ் சந்தியருகில். சி-9113

சொனி கலர் 20'' ரீ. வி. KV 2062, கித்தாச்சிகலர் 14'' ரீ. வி., குறூண்டிக் கலர் 26'' கலர் ரீ.வி., பிலிப்ஸ் 27'' கலர் ரீ வி., நாஷனல் 14'' கலர் ரீ.வி., அன்ரினு பூஸ்டர்ருடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரெலிவோய்ஸ் என்ஜினியேர்ஸ் 184A, நாவலர்ரோட், யாழ்ப்பாணம். சி-9110

வீடுகட்டக்கூடிய இரண்டு பரப்புக்காணி வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 100யார் தூரத்தில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: புதுஇல. 620மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். பழைய இலக்கம்: 248. சி-9132

உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி, "பொது அறிவும் பொது உளச் சார்பும்" விலை ரூபா 49/50. 1984, 87ல் நடைபெற்ற பரீட்சை வினு - விடைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியது. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஶ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 8878)

யூலை மாதம் நடைபெறவிருக்கும் 6ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைகுரிய பயிற்சி நூல். கணிதம்- தமிழ் இரண்டையும் உள்ளடக்கிய 15 பயிற்சிகள். விலை ரூபா 16/90. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஶ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு அஸ்ரன் பதப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம். (சி 8877)

## யாருடையது?

யாழ்.பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஏ. ஜெயபாலன் என்பவர் அரசடி ரோட் பிறவுண் ரோட் சந்தியில் ஒரு மூக்குக் கண்ணுடியை கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## வாடகைக்கு

சுன்னுகம் சந்தி மூலைக்கடைகிட்டங்கி சகல வசதிகளுடனும் வாடகைக்கு விடப்பட உள்ளது. உடனடியாக தொடர்புகொள்ளவும். திருமதி மகாராஜா, மானிப்பாய் ரோட், உடுவில். (உடுவில் மகளிர்கல்லூரிக்கு அருகாமை) சி-9124

## பயிற்சி

Computer Programming, ரெலிவிசன், வீடியோ டெக்றிப்பியறிங், எலக்றிக்கல் வைன்டிங், வயறிங் பயிற்சிகள் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 23-05-87. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவைக்கு அருகாமை], யாழ்ப்பாணம். [சி 9095]

## வகுப்புக்கள்

108, Brown Road, A/L-88 வெப்ப இரசாயனம். ஆரம்பம்: 18-5-87. ஆசிரியர்: சத்தீஸ். சி-9140

வெளிநாடுகளில் பிரபல்யமான தொழில்வாய்ப்புக்கல்வி Telex Operators (International) (இருபாலாரும்) றேடியோ ரெலிவிசன், எலக்றிக் வயறிங் ஆரம்பம் 23-5-87 டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். Electros, Thirunelvely Junction). சி-9131

Radio-TV, Air Conditioning - Refrigeration, வெல்டிங், வயறிங், மோட்டர் மெக்கானிசம், வைன்டிங், பிளம்பிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து. மனையியல்கலை, தையல், Iceing புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்திக்கு அருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் சி-9150

ஏற்கனவே ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி பெற்றவர்கள் தொழில் வாய்ப்புகளை இலகுவாகப் பெற தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயிற்சி வகுப்புக்கள் (காலம் 6 மாதம்) விரைவில் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி அருகாமையில் ஆரம்பமாகின்றது. 20 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர் கடிதமூலம் 30-05-87க்கு முன் விண்ணப்பிக்கவும். செல்வா முகுந்தா கனகசிங்கம், "த, றெஸ்ற்", கோப்பாய். (சி 9157)

## தேவை

பற்றிக் (Batik) செய்யும் ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள ஆண் பெண் வேலையாட்களும் மேல் பார்வையாளரும் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். வ. சிவஞானலிங்கம், சுதுமலை மேற்கு, மானிப்பாய். (சி 9164)

## விற்பனைக்கு

குளோரின் 100 கிறும் -3/50 கமெக்சின் 100 கிறும் 5/- டிசின் வெக்டன் 625 ML-15/- S மகாதேவன் ஜயந்தி என்றபிறைஸஸ் சின்னத்துரை விதானையார் வளவு சந்தையடி ஒழுங்கை ஆவரங்கால். (சி 9166)

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள, அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. (சி 8001)

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



வே. இரத்தினசிங்கம் (புண்ணியம்)
அன்னைமடியில்: 11- 5-1952
அரக்கரின் அழிப்பில் 19- 05- 1986

அன்பின் உருவே புண்ணியம்! எம்மை நீ பிரிந்து ஓர் ஆண்டு ஓடி மறைந்துவிட்டது. எம்மால் நம்பவே முடியவில்லை. எமதுள்ளம் உன்னைப் பிரியவில்லை. உன் நினைவலைகள் எம்மைவிட்டகலவில்லை. அகலவும் முடியாது. உன் அன்பான உள்ளத்தை, பண்பான வார்த்தைகளை, துணிவான நெஞ்சத்தை, வஞ்சமில்லா உன் வாழ்வை, நேரானநின் குணத்தை. சேவையிலே உன் சிறப்பை, கடமையிலே நின் கண்ணியத்தை, உழைப்பிலே உன்விடாமுயற்சியை எம்மால் என்றும் மறக்க முடியாது. மண்டைதீவுக் கிராமத்தின் சரித்திரம் பகரும் உன்மறைவு தமிழினத்தால் மறக்க முடியாதது. எல்லோரின் அன்பையும் உன்பண்பால் கவர்ந்தவனே! தொல்லை எதுவுமின்றித் துயர்துடைப்பாய் எமக்கெல்லாம். வல்லவனே! கள்ளமில்லா நின்பிரிவால் நித்தமும் வாடுகின்ருேம். உன் ஆத்மா முத்திபெற நாமெல்லாம் வேண்டுகின்ருேம் இறைவனிடம். என்றும் உன் அன்பு மறவா,

நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள், சகோதர சகோதரிகள். மண்டைதீவு. (சி-9145)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் கெங்ககுமாரன் ஜனகன்

பொறியியலாளர் கதிர்கெங்ககுமாரன் வசந்தியின் அன்புமகன் **ஜனகன்** முதல் பிறந்தநாள் பெருமங்கலத்தை இன்று (19- 5- 87) லண்டனில் தனது இல்லத்தாருடன் கொண்டாடுகின்றுர்.

இவரை P.K. அப்பப்பா, அப்பம்மா, S.T.R. அம்மப்பா, அம்மம்மா, சிவா சித்தப்பா, ராஜேஸ்சித்தி, Dr. பெரியப்பா, பெரியம்மா, சித்திமார், மாமன்மார் பாட்டாமார், பாட்டிமார் மற்றும் உற்ருர், உறவினர்கள் நல்லைக்கந்தன் அருள்பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கஎன வாழ்த்துகின்ருர்கள். (சி-9117)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பாதிக்கப்பட்டோர் விபரங்கள்

வல்வெட்டித்துறை,திங் கெருடாவிலில் புதிதாக அமைக்கப்பட்ட பிரஜைகள் குழு தொண்டமனறு பகுதியில் முப்படைகளின்தாக்குதல்களினுல் பாதிக்கப்பட்ட, உயிரிழந்தவர்களின் விபரங்களைத் திரட்டிவருகிறது.

86ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதிக்குப்பின் பாதிக்கப்பட்ட மக்கள் தமது விபரங்களைத் தமக்கு அறிவிக்கும்படியும் விரைவில் அதற்கான விண்ணப்பப்படிவங்கள் அவர்களுக்கு வழங்கப்படுமென்றும் மேற்படி குழுவின் செயலாளர் திரு. வி. விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

## கிரிக்கட் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,செவ்.

யாழ். கிரிக்கட் மத்தியஸ்தர்கள் சங்கத்தினுல் நடாத்தப்படும் வகுப்புக்கள் இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். இந்துக் சல்லூரியில் ஆரம்பமாகின்றன. புதிதாகச் சேர விரும்புவோர் சமூகம்தரும்படி வேண்டப்படுகின்றனர்.

## குருபாவா சுவாமிகள் ஆச்சிரம வழிபாடு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். வங்கசாலையிலுள்ள குருபாவா முகையுதீன் சுவாமிகள் ஆச்சிரமத்திற்குச் சென்று வழிபாடு செய்ய விரும்புவோர் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தினமும் காலை ஆறுமணிக்கும்- எட்டு மணிக்குமிடையிலும்- மாலை மூன்று மணிக்கும்- ஐந்து மணிக்குமிடையிலும் இவ்வாச்சிரமத்தில் வழிபட ஒழுங்கு செய்யப்படும் என்று ஆச்சிரம நிர்வாகம் தெரிவித்துள்ளது. [ஓ]

## வீட்டுப் பெண் உதவியாளர் உடன் தேவை

WANTED DOMESTIC HELPERS TO SINGAPORE

ஆங்கிலம், மலாய் பாஷைகள் பேச்சுப்பயிற்சி தொடங்கிவிட்டது. கிறீஸ், கனடா செல்லவும். சந்தர்ப்பம் உண்டு. கீழ்க்கண்ட விலாசத்தில் உடன் தொடர்புகொள்ளவும். Fridges and Typewriters Repairs and Services.

க. பொன்னுத்துரை (ஆசிரியர்)
நம். 3, கைலாசபிள்ளையார் வீதி,
நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.
[சி-9158]

## பேராதனை, கொழும்பு ஶ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் (வெளிநிலை) விரிவுரைகள்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப்பாட நெறிகளான:

- ★ கலைமாணி B. A.
- ★ விஞ்ஞானமாணி B. Sc.
- ★ சட்டமாணி LL. B.
- ★ வணிகமாணி B. Com.

வெளிவாரியாக மாணவர்களைப் பதிவுசெய்து ஏதாவது காரணங்களுக்காக விரிவுரைகளுக்கு சமூகமளிக்காத மாணவர்களின் நன்மைகருதி புதிய பிரிவு விரிவுரைகள் 23-05-1987ல் ஆரம்பமாகின்றது. கட்டணத்தில் சலுகையுண்டு.

குறிப்பு: மாணவர்களின் பாதுகாப்புக்கருதி விரிவுரைகள் 225/2, பலாலி வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு,

| கிளை: | உதவிப்பதிவாளர், |
|---|---|
| பட்டப்படிப்புகள் கல்லூரி, | பட்டப்படிப்புகள் கல்லூரி, |
| 225/2, பலாலி வீதி, | 148/1, ஸ்ரான்லி வீதி |
| கந்தர்மடம், | யாழ்ப்பாணம். |
| யாழ்ப்பாணம். | [சி-9161] |

## பிரயாண ஒழுங்குகள்

லண்டன், நோர்வே, பெல்ஜியம் (ஜேர்மனி, பிரான்ஸ் செல்வோர்)

மேற்படி நாடுகளுக்குச் செல்லவிரும்புவோர் காலதாமதமின்றித் தொடர்பு கொள்ளவும். பிரயாணம் நிச்சயம்.

**கனடா:** சிறிது தாமதமாகப் பிரயாணம் செய்யத் தயாரானவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புக்கான முகவரி:

க. செல்வநாயகம்
ஶ்ரீ சாந்திநிகேதன்
வளாக ஒழுங்கை (பலாலி வீதிப்பக்கம்),
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி 9133)

### மணிவாக்கு

அநித்தியத்தை நித்யமென்று ஆதரவாயெண்ணுதே
தனித்திருக்கேன் என்குதேதனை மறக்கேன்என்குதே.

—பட்டினத்தார்.

## நமது நோக்கு

# இலங்கையின் இனஒதுக்கல் இன்னெருவிதம்

மிகைப்படக்கூறல் மனித இயல்பு நாட்டுக்கு நாடு இது வேறுபடுவதும்இயல்பு. மொழி ரீதியாய்ப்பார்க்கில் தமிழில் ஒவ்வணி தொழிற்படுவதுபோல் வேறெந்த மொழியிலுமுண்டா என்ற சந்தேகம் கிளம்பும்.

தூணை எடுத்துத் துரும்பாகவும், துரும்பை எடுத்துத் தூணுகவும் மாற்றும் கலை தமிழில் வாதாடும் சட்ட அறிஞர் நீதிமன்றங்களில் நன்ருக ரசிக்கும்நிலையில் காணப்படும்.

தென்ஆபிரிக்காவை சில வருடங்களுக்குமுன் வட இலங்கை நிகழ்ச்சிகளுக்கு ஒப்பிட்டு வியர்சித்தபோது நாம் அதனை முற்ருக ஏற்கவில்லை. தென்ஆபிரிக்காவின் இன ஒதுக்கலுக்கும் வடஇலங்கையின் உரிமைப் போராட்டத்துக்கும் பாரிய வேறுபாடு இருந்ததைக் குறிப்பிட்டோம்.

இன்று நிலை தலைகீழாக மாறிவிட்டது. அந்த மாற்றத்துக்கு அடிப்படை ஒற்றுமை ஆதியில் இருந்ததை நாம் இன்றுதான் உணர முடிகிறது.

தெனஆபிரிக்கா இன்று நடத்திமுடித்த 'தனி வெள்ளையர்' பொதுத்தேர்தல், சிறிலங்காவின் 'தனிச் சிங்களத்தின்' சகோதரம் என்பது இன்று எளிதில் விளங்குகின்றது.

இந்திய லோகசபையில் பலர் பலவிதமான கண்டனக் கணைகளை இலங்கை அரசின்மேல் ஏவுகின்றனர்; ஆனல் பொறுமையுடன் நிலைமையைப் புரிந்துவந்த ஜனதாக்கட்சி உறுப்பினர் சயீட் சஹாபுதீன் "இலங்கை தென் ஆபிரிக்காவாக மாறிக்கொண்டுவருகிறது" என்று குறிப்பிட்டது நிலைமை மோசமடைந்ததைத் தெளிவாக விளக்குகிறது.

'மாறிக்கொண்டு வருகிறது' என்ற வசனத்தில் காணப்படும் சொல்விற்பனமும் அவதானமும், அவர் எந்த விடயத்தைக் கணிப்பதிலும் அளந்துபேசும் அங்கத்தவரென்பதை நிரூபிக்கிறது.

இராஜதந்திரமென்பது வெறும் அதீத நாடகத் தன்மை கொண்ட செயல்கள் அல்லவென்றும், இலங்கை விடயம் பற்றி நிரந்தரமான பேச்சுவார்த்தைக்குழுவே எமக்கு அவசியமென்றும் சபையில்சாடியிருப்பது இந்திய அரசின் தெளிவற்ற மத்தியஸ்தத்தைக் குறிப்பிடுகிறது.

'அழகான நாடு. பூவுலக சுவர்க்கம் பறிபோய்விட்டது' என்ற தலைப்பில் 'நியூஸ் வீக்' என்ற (வியூஸ் வீக் என்பது கூடிய பொருத்தம்) வார சஞ்சிகை கட்டுரை ஒன்றை வரைந்திருக்கிறது.

கொழும்புபுறக்கோட்டை சம்பவத்தையே பீடிகையாகக்கொண்டு நீண்டகாலம் அப்பாவித்தமிழர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டதும், உயிருடன் எரிக்கப்பட்டதும் எதனையும் அறியாததுபோல் புறக்கோட்டை அத்திபாரத்தில் எழுப்பப்படும் மாளிகை கண்ணுக்கு விருந்தாகலாம்; ஆனல் கருத்து திரிக்கப்படுகிறது.

கண்ணை மூடிக்கொண்டு இப் 'பிரபல' சஞ்சிகை படிப்பது இன்று'ஆங்கிலம்' படித்தவர்களின் 'பாஷன்'. அகக்கண்ணுல் வரிகளுக்கிடையில் கரந்து நிற்கும் கருத்தைப்புரிய முடியுமானுல், தென்ஆபிரிக்காவில் போத்தாஆட்சியை, பாகிஸ்தானில் ஸியா ஐயா) ஆட்சியை, பிலிப்பைன்ஸில் (இன்றும்) மார்க்கொஸ் ஆதரவாளர் ஆட்சியை விரும்பும் ஏகாதிபத்திய வாதிகளுக்குச் சார்பான 'வியூஸ்' (Views) இச்சஞ்சிகையில் வார நியூஸ் என்ற போர்வையில் வடிக்கப்படுகிறது. வாசகர்கள் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்.

இலங்கை அழகுநிறைந்த நாடு. ஆனல் மனிதன் இன்று என்ன செய்கிருன்? அவன்தேர்ந்தெடுத்தஆட்சி தனிச்சிங்கள ஆட்சி; அந்த நாடு தனிச்சிங்களச் சட்டத்தில் நிர்வகிக்கப்படுகிறது. தென் ஆபிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பருக்கு 'வேலையில்லை' என்று போத்தாவின் இனவாதஅரசு கொள்வதுபோல், இங்கு 'திராவிட' தமிழருக்கு குண்டும், ஹெலியும், ஷெல்லும் தான் என்கிறது ஜே. ஆரின் இனவாத அரசு.

இவ்விரு நாடுகளின் ஒற்றுமையை குறிப்பிட்ட நாம் வேற்றுமையை விளக்குவதும் அவசியமாகும். வரலாற்றுக் காலம்தொட்டு இந்நாட்டின் தமிழ்மக்கள் தங்களை ஆளும் மரபுடையவர்கள். அறிவு ஆற்றல் பண்பாடு போன்ற விடயங்களில் பெரும்பான்மை மக்களுக்கு சமானமானவர்கள். ஒரு காலத்தில் இலங்கையின் அரண்மனை மொழி தமிழ் என்பது இன்று எல்லோரும் அறிந்த விடயம். இலகுவில் இந்தஇனம் அழியுமென்பது மடமை.

இதன் அடிப்படையில் தென் ஆபிரிக்காவாக மாறிவரும் இலங்கையைத் தடுத்துநிறுத்தும் பொறுப்பு இந்நாட்டு மக்களுக்குரியது. 'தனிச்சிங்களத் தேர்தல் மூலம் அல்ல; 'இன்ஸ்டன்' தமிழர்சுயாட்சி நிறுவவல்ல ஆட்சி அமைப்பதன் மூலமே!

## கோட்டையிலிருந்து 'ஷெல்' தாக்குதல்

யாழ்ப்பாணம் செவ்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நகர் புறத்தை நோக்கி நேற்று முன்தினம் மாலை ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் இம்முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

(ஓ)

உலக அரசியல் — அவதானி

# பிரிட்டிஷ் பாராளுமன்ற பொதுத்தேர்தலும் அதன் கேலிச்சித்திரங்கள் போன்ற வேறு சில நாடுகளும்

எதிர்வரும் யூன் 11ல் பிரிட்டிஷ் பொதுததேர்தல் நடைபெறவிருக்கிறது. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் உரிமை ஆட்சியிலிருக்கும் கட்சிக்குண்டு. எனவே பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் அடுத்தடுத்து மூன்று முறை பிரதமராகும் சாதனையை நிலைநாட்டமுயல்வது தெளிவு. பிரிட்டனின் சரித்திரத்தில் முன்னெருமுறை இத்தகைய சாதனை நிகழ்ந்திருக்கிறது. 1812—1827 காலத்தில் சொத்துரிமையுடையவரே வாக்காளர்களாக விருந்த காலத்தில் 15 வருடம் லிவர்பூல் பிரபு பிரதமராகவிருந்தது குறிப்பிடத்தக்கது. இன்னுமொரு வருடம் பதவியில் இருக்க வாய்ப்பிருந்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது அடுத்த தடவையும் ஆட்சிக்கு வரும் வாய்ப்பு தமது கட்சிககு இன்றிருப்பதால் பொதுத்தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளார்.

இன்று கன்சர்வேட்டிவ் கட்சிக்கு பேராதரவு இருந்தபோதும் கடைசிநேரத்தில் மூன்ருவது கட்சியாகத் தோன்றியிருக்கும் சோஷல்—ஜனநாயகட்சி எஸ். டீ. பீ. (S.D P) இன்றெரு புதிய பலம்பெறும் வாய்ப்பு பெற்றிருக்கிறது. தொழிற்கட்சி, கன்சர்வேட்டிவ் கட்சி — இவ்விரண்டு பெரும் கட்சிகளில் ஏமாற்றம்கண்ட வாக்காளர், எஸ். டீ. பியை ஆதரித்தால் அவர்களின் வாக்கு சில கேந்திர இடங்களில் பெறும் வெற்றியால் நிலைமையை மாற்றும் அந்த மாற்றம் இடம்பெற்ருல் எந்த ஒரு பெருங்கட்சியும் தன் பலத்தைக் கொண்டு ஆட்சிநடத்தமுடியாத நிலை ஏற்படும். அத்தருணத்தில் எஸ். டீ. பீ யாருடன் இணையுதோ அதுவே ஆளும் கட்சியாகும். இது வருங்கால பிரிட்டிஷ் அரசியலில் கணிசமான மாற்றம் ஏற்படுத்தலாம். ஆனல் தாட்சர் பூரணவெற்றியில் நம்பிக்கை கொண்டுள்ளார். தேர்தல் பிரசாரம் பிரிட்டிஷ் வாக்காளருக்கு ஒருவரப்பிரசாதம்.

பிரிட்டன் பாராளுமன்ற ஆட்சியின் 'அன்னை' என்று கொள்ளப்படுகிறது. பல நூற்ருண்டுகளாக, ஜனநாயக பாரம்பரியத்தை தட்டி நீட்டின பெருமை பிரிட்டனுக்கே உரித்தானது. எந்த நெருக்கடியிலும் மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு என்றபடி ஆட்சிமாற்றம் நடைபெறும் உரிய காலத்தை எட்டிபின்போடல், தேர்தல் குழப்பங்கள், அளப்புதல், மோசடி, இராணுவ தலையீடு, சதிப்புரட்சி, போலி ஜனநாயக புரட்சி மருந்துக்கும் கிட்டா.

இதற்கு நேர்மாருக இராணுவபலம் நடத்தும் குழப்பங்கள் பல நாடுகளில் பாராளுமன்ற பொதுத்தேர்தலை கேலிச் சித்திரங்களாக்கி விடுகின்றன.

## பிஜி

பசுபிக் சமுத்திரத்திலுள்ள மிகச் சிறிய நாடு— அண்மையில் பொதுத்தேர்தலில் வெற்றியடைந்த பிரதமர் திமோசி பவேத்ராவும் அவருடைய சகாக்களும் இராணுவத்தினுல் பணயம்வைக்கப்பட்டு ஒரு சதிப்புரட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது, அயல் நாடுகள் — அவுஸ்திரேலியாவும் நியூஸிலந்தும் இதனைக் கண்டித்ததுடன் நாட்டின் சட்டபூர்வ ஆட்சித் தலைவர்கள் உதவிகோரினுல் அதனை வழங்கத் தயங்சமாட்டோமென்றும் அறிவித்திருக்கின்றனர். பிரிட்டிஷ் ராணி இதனைக்கண்டித்து முந்தியநிலைக்கு நாடு திரும்ப நடவடிக்கை வேண்டுமென்கிருர்.

பிஜியின் இனப்பிரச்னை எவ்வாறிருந்தாலும், பிஜியரோ, இந்தியரோ அங்கு முன்வந்தவர்கள், எவர்களின் ஆதிக்கம் கூடியது — இவை அனுவசிய விடயங்கள் சட்டப்படி தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி ஆட்சியிலிருந்து சதி மூலம்கவிழ்க்கப்படுவதை எந்த ஜனநாயக நாடும் பார்த்துக் கொண்டிராது.

தோல்வியடைந்த பிரதமர் மாரா இச்சதிக்கு காரணயிருக்கிருரென்றும், அவருடைய மருமகன் பிஜியின் இராணுவத்தளபதி பிரிகேடியர் நாய்லாடிகா, நாட்டில் இல்லாத சமயம், மேல் ராணுவ அதிகாரி ரபூகா தமது செல்வாக்கைக் கொண்டு இந்தப் புரட்சியை நடத்தி முடித்தாரென்று கூறப்படுகிறது.

நாடு திரும்பியபின் இராணுவத்தளபதி தமது மாமனுர் உருவாக்கிய சதியை முறியடிக்க, இராணுவ நடவடிக்கையைக் கண்டித்து நாட்டின் சட்டபூர்வமான ஆட்சிக்கு மீட்சியளிப்பாரா?

## பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இராணுவத்தின் பலமும், அதன்பங்கும் மக்கள் சார்பாக விருந்தது பாராட்டத்தக்கது.

இரண்டு கோடியே அறுபது இலட்சம் மக்கள் 15 வருடங்களுக்குப்பின் முதன் முதல் சுதந்திரமாக வாக்களிக்கிருர்களென்பது இத்தேர்தலின் முக்கிய அம்சம். மிகக் குறுகிய காலம் பதவியிலிருந்த ஜனதிபதி திருமதி அக்கினே பல கொலைகள், குழப்பங்கள், குளறுபடிகளை முறியடித்து இத்தேர்தலை நடத்தியிருக்கிருர். பத்துப்பேரின் உயிரைக் குடித்த வன்முறைகள் தேர்தல் பிரசாரத்தில் இடம்பெற்றபோதும், பதவியிழந்த மார்க்கோஸின் ஆதரவாளர்கள் குழப்பங்கள் ஏற்படுத்திய போதும் மக்கள் திலகம் என்று அழைக்கப்படும் திருமதி அக்கினே இவை அனைத்துக்கும் ஆப்பு வைத்திருக்கிருர்.

1946இல் பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றபின் நடைபெற்றுள்ள மிகத்தூய்மையான தேர்தல் அக்கினேவின் ஆட்சியில் நடைபெற்றுள்ளது. இன்று அமெரிக்கா மீண்டும் ஒரு மாற்றத்துக்கு அடிகோலுவது போல் தெரிகிறது.

ஆனல் மார்க்கோஸ் பெருமழைவிட்டபோதும் அதன தூவானம் போகவில்லை. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கிளர்ச்சி, முஸ்லிம் பிரிவினைப் போராட்டம் அக்கினேவிற்கு அதிக தலைபிடி கொடுத்திருந்தன. கம்யூனிஸ்ட் தீவிரவாதம் இன்றும் அடங்காத நிலையில் இருப்பது மெய். பிஜீயைப்போல் ஆர்ஜென்டினுவைப்போல் இராணுவத்தில் பெருங்குழப்பம் இடம்பெறவில்லை, முன்னை நாள் பாதுகாப்பு அமைச்சர் என்ரைல் அதனைத் தூண்டிய போதும் அனுபவிக்கவில்லை மக்கள்எவ்வழி ஆட்சி அவ்வழி, ஆட்சி எவ்வழி இராணுவம் அவ்வழி.

இன்று என்ரைய தலைமையில் இயங்கும் எதிர்க்கட்சி— Grand alliance for Democracy ஜனநாயகத்திற்கான பாரிய கூட்டணி தேர்தலில் மோசடி நடந்திருப்பதாகவும், அது அரசியல் ஸ்திரமின்மையைக் கொண்டுவருமென்றும் கூறுகிறது. தேர்தல் முடிவுகளை ஆட்சேபிக்க ஆரம்பித்துவிட்டது. முன்னைநாள் பாதுகாப்பு அமைச்சர் இராணுவத்தை ஜனதிபதி அக்கினேவிற்கெதிராக பயன்படுத்தும் செல்வாக்கற்றிருந்தது தெரிந்ததே.

### இந்தோனேஷியாவின் பொதுத்தேர்தல் வேடிக்கை விழா இலங்கைக்கு ஒரு எச்சரிக்கை!

இருபது வருடம் ஆட்சியிலிருந்தஜனதிபதிசுகார்ட்டோ இன்று நடத்திய பொதுத்தேர்தல் 'ஜனநாயகப் பெருவிழா' என்று பிரகடனப் படுத்தியிருந்தார். ஸ்திரமான ஆட்சியில் அமர்ந்திருக்கும் சர்வாதிகார ஜனதிபதி, சுகார்ட்டோவிற்கு 73 சத வாக்கு கிடைத்தது ஏற்கனவே தெரிந்த விடயம். ஒன்பது கோடிமக்கள் நானூறு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்திருக்கின்றனர்.

63 வயதுடைய ஜனதிபதியின் ஆட்சியில் கடன்பழு 36பில்லியன் டொலர், ஊழல் நிறைந்த ஆட்சி ஜனதிபதியின் மக்கள அதில் முன்னிற்பவர்கள் இருப்பினும் ஐந்தாவது தடவை ஆட்சிக்கு வந்திருக்கிருர். ஜனதிபதி சுகார்னேவின் முற்போக்கு ஆட்சியை சதிமூலம் முறியடித்த இந்த வீரன் ஜனநாயகத்தின் மணம்குணம் என்னவென்பதை மக்களுக்கு முன்னேற்ற மளிக்கும் சட்டமூலம் அறிமுகப்படுத்தவில்லை இராணுவ ஆதரவும் இளைப்பாறிய இராணுவத் தலைவர்களைக் கொண்ட அமைச்சரவையும் அவரின் நீண்டகால 'நடப்புக்கு' உதவுகின்றன. பிலப்பைன்ஸைப்போல் நாடு புரட்சிக்குரியநிலை அடையவில்லை.

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.செவ்.

நாவற்குழி மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வித்தியாலய அதிபர் திரு த முத்துக்குமாரசாமி தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இக் கூட்டத்தில் கடந்த வருட, இவ்வருட செயல் திட்டங்களைப்பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்க படுகிறது.

## மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம்,செவ்.

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பரா லைற் வெளிச்சம் ஏவி விடப்பட்டது.

தீப்பிளம்பு போல் முகாமிலிருந்து வெளிக் கிழம்பிய இந்த லைற்மிகவும் பிரகாசமாக சுமார் ஐந்து நிமிடம் வரை எரிந்தது.

இந்தப் பரா லைற் வெளிச்சத்தைக் கண்டு அச்சமடைந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

(ஓ

# அமெரிக்கா போர்க்கப்பல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல்

## வளைகுடா போரில் வல்லரசுகள் தலையிடும் அபாயம்

வாஷிங்டன், மே. 18.
அமெரிக்க போர்க்கப்பல் ஒன்று வளைகுடாவில் வைத்து ஈராக்கிய ஏவுகணைத்தாக்குதலுக்கு இலக்காகி முற்றுகச் சேதமடைந்து நீரில் மூழ்கியது. பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் வளைகுடாப் போரில் அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று ஏவுகணைத்தாக்குதலுக்கு உட்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

ஈராக் விமானங்களிலிருந்து தவறுதலாத அனுப்பட்ட இரு ஏவுகணைகளே இப்போர்க்கப்பலை தாக்கி மூழ்கடித்தன என்றும் ஈராக் அமெரிக்க போர்க் கப்பலைத்தாக்குவதற்கென்றே அந்த ஏவுகணைகளை ஏவிவிடவில்லை என்றும் அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலுக்கான போர்க் கப்பல் தொடர்ந்து எரிந்து கொண்டே மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் அதிலிருந்த நூற்றுக்கணக்கான மாலுமிகளும் போர் வீரர்களும் பத்திரமாகக்கரை சேர்ந்துவிட்டனர் என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. கஜார்ஜ் சூல்ஸ் தெரிவித்தார்.

### அமெரிக்கா ஈராக் தூதுவரிடம் ஆட்சேபம்

இதேவேளையில் அமெரிக்காவில் உள்ள தூதரகத்திடம் இத்தாக்குதல் குறித்த தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க அண்மையில் வளைகுடாவில் சென்றுகொண்டிருந்த சோவியத்எண்ணெய்க்கப்பல் ஒன்று ஏவுகணைத் தாக்குதலுக்குட்பட்டதை அடுத்து சோவியத் யூனியன் ஆத்திரமடைந்துள்ளது.

இக்கட்டத்தில் வளைகுடா போரில் வல்லரசுகள் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தனது கப்பல்கள் இனிமேல் தாக்குதலுக்குள்ளாஞல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். சோவியத் யூனியனும் இது போன்ற தாக்குதல்கள் எதிர்காலத்திலும் இடம் பெற்ருல் அது தீவிரமாகக் கருதப்படும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

### பத்திரிகையாளர் கைது! நாடு கடத்தல்!!

சுவா, மே. 18
'பிஜி' தீவில் இராணுவ புரட்சியாளர்கள் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைக் கைது செய்து நாடு கடத்தியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.
ஆஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்களைக் கைது செய்த இராணுவம் அவர்கள் இருவரையும் கைது செய்த கையுடனேயே விமான நிலையத்துக்கு அழைத்துச்சென்று விமான மூலம் நாடு கடத்தியது.
பி. பி. ஸி. நிருபரும் கைது செய்யப்பட்டு 4 மணித்தியாலத் தடுப்புக் காவலின்பின் விடுதலை செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## போராளிகள் ஒன்றிணைந்து போராடுவது அவசியம்

### "அமிர்" கூறுகிறர்

சென்னை, மே 18.
இலங்கைத் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இந்தியா உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய மத்திய அரசுத் தலைவர்களைக் கோருவதுடன் அதற்கு அவர்களை இணங்க வைக்கப் போவதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

புதுடில்லி செல்லும் வழியில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறிய தாவாது:-

தற்போது பலவேறு பிரிவுகளாக இயங்கும் போராளிகளின் முக்கிய பிரிவுகள் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழ் பகுதிகளில் இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதால் உடனடியாகப்பெரும் இராணுவத்தாக்குதல் இடம் பெறலாம் என தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

## ஆலய பிணக்கு சுமுகமாக தீர்த்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்வாய்
அல்லைப்பிட்டி "கறண்டிப்பாய் கந்தசுவாமி கோவில்" நிர்வாகம் சம்பந்தமாக அவ்வூர் மக்களிடையே பல வருடமாக நிலவி வந்த பிணக்கு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. வி. பி சுந்தரலிங்கத்திஞல் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது

குறித்த கோவில் நிர்வாகம் தொடர்பாக மக்கள் பிளவுபட்டு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு பல வருடங்களாக விளக்கம் நடந்து வந்தது.

தற்போதைய மாவட்ட நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் முன் இவ்வழக்கு முதற் தடவையாக விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, முன்னைய விளக்கங்களையும் பார்வையிட்ட நீதிபதி, தான் ஆலயத்தை நேரில் சென்று பார்வையிட்ட பின் இருதரப்பினருக்கும் ஏற்புடையதான முகாமைத் திட்டத்தை சமர்ப்பிப்பதாகக் கூறிஞர்.

நீதிபதியின் சமரசத்தை இருகட்சியினரும் ஏற்றுக் கொண்டதையடுத்து, நீதிபதி ஆலயத்தைப் பார்வையிட்டு முகாமைத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தார் நீதிபதியின் சமரசத்திட்டத்தை இரு தரப்பினரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வதாக அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

நீதிபதி தனது தீர்ப்பின் போது, ஆலய நிர்வாக விடயங்களில் பிணக்குகள் இருக்கக்கூடாதென்றும், இவ்வாலயத்தைப் பொறுத்தமட்டில் கௌரவப் பிரச்னைதான் இவ்வாருன பிணக்குகளுக்குக் காரணமாகவும், ஆலயம் சிறப்பாக இயங்குவதற்குத்தடையாக இருந்ததெனவும் குறிப்பிட்டு, ஆலய சபை உறுப்பினர்கள் ஒற்றுமையாகவும், சமய உணர்வுடனும் செயலாற்ற வேண்டுமெனவும் கூறிஞர்.

## சுவிஸ், பாரிஸில் விடுதலைப் புலிகளின் மேதினம்!

பேர்ன், மே 18
சுவிட்சர்லாந்தில் கடந்த முதலாம்திகதி அந்நாட்டு அரசியல் மற்றும் அரச, தனியார் தொழிற்சங்கங்களுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் மற்றும் தமிழ்மக்கள் ஆதரவு அமைப்புகளும் சூர்மாநகரில் மாபெரும் மேதினப் பேரணியை நடாத்தியுள்ளன.

இம்மாபெரும் பேரணியில் சுவிஸில் வாழும் தமிழ் மக்களுடன் ஏனைய இனத்தவர்களும் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதேதினம் பிரான்ஸின் தலைநகரான பாரிஸிலும் பிரபல தொழிற்சங்கமானஸிஜீவியுடன் விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும் இணைந்து மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தின. இப்பேரணியிலும் பிரான்ஸ்தேச பல இன மக்கள் கலந்து கொண்டு தமிழ்மக்களுக்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்தனர்.

இவ்விரு நாட்டிலும் இடம் பெற்ற ஊர்வலங்களில் இலங்கையில் தற்போது தமிழர்களுக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளை எழுத்து வடிவிலும், சித்திர வடிவங்களிலும் தாங்கிய சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

விடுதலைப் புலிகளினதும், சர்வதேசம்தழுவிய தோழமை அமைப்புகளினதும் இம்மேதினப் பேரணிக்கு பல நாடுகளிலுமிருந்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

"எங்கள் தலைவர் பிரபாகரன்"

"இந்தியாவே! தமிழ் ஈழத்தை அங்கீகரி"

"சிறிலங்கா அரசே பொருளாதாரத் தடையை நீக்கு."

"ஐ. நா. வே தமிழர் படுகொலையைத் தடுத்துநிறுத்து" போன்ற சுலோகங்கள் இந்த ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்டன. (சி)

## கூட்டணியின் புதுடில்லி விஜயம்

சென்னை, மே. 18
இலங்யையில்க இனப்பிரச்னை தொடர்பாக இந்திய மத்திய அரசின் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் குழு கடந்த இரவு புதுடில்லி பயணமாகியது.

கூட்டணித் தலைவர் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையிலான இக்குழுவில் திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன் ஆகிய இருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

## இந்திய ஜனதிபதியைக் கொலை செய்ய முயற்சி

புதுடில்லி, மே 18.
சீக்கிய தீவிரவாதிகள் இந்திய ஜனதிபதி திரு ஜானி ஸெயில் சிங்கைப் படுகொலை செய்யத்திட்டமிட்டுள்ளனர் எனக் கிடைத்துள்ள இரகசியத் தகவலை அடுத்து ஜனதிபதியினதும் ராஷ்டிரபதி பவனினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகளை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து தீவிரவாதிகள் புதுடில்லிவந்து அங்கு வன்முறைகளில் ஈடுபடலாம் என்பதால் புதுடில்லியில் பாராளுமன்றக் கட்டிடத்திலும் ஏனைய கேந்திரநிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

## ஆஸ்பத்திரியில் எல்லைக் காந்தி

பம்பாய், மே. 18
நோய்வாய்ப்பட்டு பம்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் எல்லைக்காந்தி கான் அப்துல் கபார் கானை இந்திய ஜனதிபதி திரு. ஜானி ஸெயில் சிங் நேரில் சென்று பார்வையிட்டார்.

97 வயதான எல்லைக் காந்தி இருதய நோயினுல் அவதிப்படுகிறுர் என அறிவிக்கப்படுகிறது.

## மொறீஸியஸில் இந்திய திரைப்பட விழா

சென்னை, மே. 18
மொறீஸியஸில் இம்மாதம் 22-ம் திகதி இந்திய திரைப்பட விழா ஒன்று ஆரம்பமாகின்றது. இவ்விடயத்தினை கல்வி, கலாசார அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் சென்னையில் தெரிவித்தார்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி உட்பட பல இந்திய மொழிகளிலான 12 திரைப்படங்கள் இத்திரைப்படவிழாவில் காண்பிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

## இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 5 (19 - 05 - 1987)
கிழமை- செவ்வாய்
திதி- ஸப்தமி பி. இ. வரை
நட்சத்திரம்- திருவோணம் பி. ப. வரை

மேடம்: மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன் தரும் பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். அறவழி நாட்டமுண்டு.

இடபம்; தெளிந்த மனம். தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

மிதுனம்: துன்பத்தின் நிழலாட்டம் தொடரும் அதிக பேச்சைத் தவிர்க்கவும் வரவிலும் தடையுண்டு.

கடகம்: குடும்பத்தில் அமைதி நிலவும் களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும். நீண்டநாள் கனவும் நனவாகும்.

சிங்கம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையலாம். மயங்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும் இன்று சும்மா இருப்பதே சுகம்.

கன்னி: குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும் தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். பயனுள்ள தொடர்புமுண்டு.

துலாம்: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிர் பாராத வரவும் உண்டு.

விருச்சிகம்: வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்கும் பெருகும்.

தனுசு: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணை தாக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

மகரம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தோன்றும் எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் உருவாகலாம் உடல் நலமும் பாதிக்கப்படும்.

கும்பம்: ஒளிமயமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு ஆசிரியர்கள் பாராட்டப் படுவார்கள்.

மீனம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்குச்சிலர் முனைவர்.

திருமலை ரவீந்திரன்

# இலங்கைவங்கியில் பணத்தட்டுப்பாடு ஓய்வூதியம் பெறுவோர் சிரமம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கியில் நிலவிவரும் பலத்த பணத்தட்டுப்பாடுகாரணமாக இவ்வங்கியில் தங்கள்மாதாந்த ஓய்வூதியப்பணத்தைப் பெற்று வரும் சுமார் 400 ஓய்வூதியம் பெறுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து சேவைக்கூலியாக தலா பத்துரூபா அறவிடப்பட்டு வருகின்ற போதிலும் உரிய காலத்தில் சிரமமின்றி ஓய்வூதியத்தை பெறமுடியாது இருப்பதாகவும் தொடர்ந்தும் தாமதம் ஏற்படும் பட்சத்தில் தமது சங்கம் வேறு மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ள விருப்பதாகவும்பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் நலன் புரி கூட்டுறவுச் சங்கச்செயலாளர் ஏ. வி. துரையப்பா தெரிவித்தார்.

இதேவேளை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை கடந்தவாரம் ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரி கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியது. (எ)

# பயன் தரும் புளிய மரங்கள் வீணே அளிக்கப்படலாமா?

யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களிலும் தினமும் ஏறக்குறைய நான்கு புளியமரங்கள் வீதம் எதிர்பாராத முறையில் அழிக்கப்படுகின்றமை கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதுயான ஓர் முக்கிய ஆய்வுக்குரிய விடயமாகும் என்பது அனைவரும் அறிய வேண்டியது அவசியம்.

மலைநாட்டில் "பலா" தறிப்பது, திருகோணமலையில் "அரச மரம்" அழிப்பது, யாழ்ப்பாணத்தில் "பனை" தறிப்பது தடுக்கப்பட்டு பிரதேசரீதியாக மக்கள்உணர்ந்து பயன்பாடுகளை ஒருகணம் சிந்தித்து தமது ஒத்துழைப்புகளை இயற்கையான முறையில் நெறிப்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புளியம்பழம் உணவைப் பழுதுபடாது பாதுகாக்கும் தன்மை கொண்டது. உதாரணமாகப் பிரயாணம் மேற்கொள்ளும் முதியவர்கள் "புளிச்சாதம்" எனும் உணவுப் பண்டத்தை எடுத்துச் செல்வது வழமை. புளியம் பழத்தில் "கந்தகம்" சத்து உண்டு. இன்று புளியமரங்கள் பரவலாக அழிக்கப்படுகின்றமையால் புளியம்பழத்தின் விலை பல மடங்கு அதிகரித்தும் சில சந்தர்ப்பங்களில் தட்டுப்பாடு நிலவுகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

பதினைந்துவருடத்தில் பயன் தரும் புளியமரம் ஏறக்குறைய முந்நூறு வருடங்கள் பாதிக்காது நிலைத்து நிற்கும். பதினெட்டாம்நூற்றுண்டில் ஆங்கிலேயப் பிரபு றெபேர்ட் நொக்ஸ் மூதூரில் வந்து முதலில் தங்கிய இடத்திலிருந்த புளியமரம் 1977-ஆம் ஆண்டு தான் சரிந்தது. இதுபோன்ற வரலாற்றுச் செய்திகள் மூலம் புளியின் மகிமையை அறிய முடிகின்றது. சைவ ஆலயங்களில் வரலாற்று ரீதியாகப் புளியமரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்றைய பரம்பரை மரண தண்டனையைக்கூட புளிய மரத்தில் நிறைவேற்றியமையை "கட்டபொம்மன்" தூக்குத் தண்டனைச் சம்பவம் நினைவுபடுத்துகின்றது.

உழவுத்தொழில் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவும் எருமைகளை உணவுததட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கூட இறைச்சிக்காக கொலை செய்யக் கூடாது என்பது மரவு.

எனவே, பொருளாதார கஷ்டத்தினால் குறிப்பாக பல குடும்பங்களில் கல்விஅபிவிருத்திக்கு கூட மரங்களை தறித்து விற்பனை செய்வது தவிர்க்க முடியாதபோதிலும் இயற்கையை பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"வெள்ளம் வருமுன்னே அணைகட்ட வேண்டும் என்ற நோக்கில் 1936 ஆம் ஆண்டளவில் "ராஜாஜி" அவர்கள் "புளியமர நடுகை" இயக்கத்தை வழிப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. எங்கள் உணவு தயாரிப்பில் அறுசுவைகளில் அதிக பங்களிக்கும் புளியம் பழம் - சிறிய விலங்குகளால் தீண்டிய நிலையில் விஷம் அகற்றும் பணியை கிராமிய மட்டத்தில் கவனிக்கின்றமையுடன் புளியம் இலைகளின் பயன் விரக்தியடைந்த நபர்களை குணப்படுத்தும் செயல்பாடுகளும் அவதானிக்க முடிகின்றது. தடிமன் நோயாளர்கள் புளிக்கஞ்சி எனும் உணவுப்பதார்த்தத்தை பயன்படுத்தி பலன்பெறுவது இன்றும் கிராமிய மட்டத்தில் வழமையான நிகழ்ச்சி.

"புளியமா சருகு" விவசாய நிலங்களுக்கு உவர், களர் திருத்தங்களை PH இல் சமப்படுத்திக் கொடுக்கும், புளியங்கொட்டை, எண்ணெய், புளியம் பசை, வர்ணத் தயாரிப்பு முதலிய தயாரிப்பகற்கு புளியமரம் தாவரவர்க்க மூலப்பொருளாகத் திகழ்கின்றது. சித்த வைத்தியத்துறையில் புளிய மரத்திற்கு முக்கிய இடம் கொடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, இப்படியாக பொருளாதார ரீதியாக சமுதாயநலனுடன், இயற்கை தொடர்புடன் கூடிய புளியை அழிக்கும் செயலை நிறுத்தி புளிகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவோமாக!!!

—வீ. சிதம்பரநாதன்,
பயிர்ச்செய்கை
உத்தியோகத்தர்,
சங்கானை-கிழக்கு


லிடோ யாழ். நகர்
10-30, 2-30 4-30, 6-30
Flash Dance
(Color)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4-30, 6-30
நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)


# காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,செவ்.

வல்லையில் கடந்த வாரம் மினிபஸ் ஒன்றை ஹெலிகொப்டர் துரத்திய போது பஸ்ஸிலிருந்து விழுந்து படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை (வயது 31) நேற்று முன்தினம் மரணமானார். (கு)

# பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

சுன்னாகம் மேற்கு ஐயனார் சனசமூக முன்னேற்றக் கழகத்தின் கலாசாரப் பிரிவினரால் கடந்த பௌர்ணமி தினத்தன்று பொதுஅறிவுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்: 1ம் பரிசு ஆர். ரமேஸ், 2ம் பரிசு எஸ். ஈஸ்வரன், 3ம் பரிசு பி. சிவகுமாரன். அடுத்த பொது அறிவுப் போட்டி [11-06-87] எதிர்வரும் பௌர்ணமிதினத்தன்று நடைபெற இருப்பதாக கழக பிரதிநிதிதெரிவித்துள்ளார்.

# பருத்தித்துறை பிராந்தியத்தில் கொடிதினம்

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறைப் பிராந்தியத்தில் கொடிதினமொன்றை ஈரோஸ் இயக்கத்தின் மாணவர் அணியான மாணவர் இளைஞர் பொதுமன்றம் எதிர் வரும் 21ம், 22ம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இது குறித்து மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசின் மிலேச்சத்தனமான ஒடுக்குமுறையினால் மாணவர்கள் காலங்காலமாக பாதிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றனர். பருத்தித்துறையில் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையின்மீது 22-4-87 அன்று விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் அப்பாடசாலையின் அலுவலகம், வகுப்பறைகள் மண்டபம் ஆகியன முற்றாகச் சேதமடைந்தன. அத்துடன் இன்றுவரை அப் பாடசாலைக் கட்டடம் ஒழுங்கமைக்கப்படவில்லை.

இதனை நிவர்த்திசெய்யவும், மேலும் சிறப்புற பாடசாலையை நடாத்தவும் எதிர்வரும் 21, 22ம் [வியாழன், வெள்ளி] திகதிகளில் கொடி தினமொன்றை 'கைஸ்' நடாத்துகிறது பருத்தித்துறைப்பிராந்தியத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் இது நடாத்தப்படும். இதற்கு ஆதரவு நல்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

## கோப்பாய் பாலம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

பிரஸ்தாப நபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் நாவற்குழிக்குச் செல்லவந்ததாகவும், கோப்பாய்ப் பாலத்திற் கருகில் செல்கையில் தம்மை நோக்கி முன்பக்கமாக வந்து ஹெலிகாப்டர் தமது மட்டத்திற்கு பதிந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக காயமடைந்தவர் கூறினார். [கு]

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்பாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ள பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி ஆராய த. வி. கூ. வைச்சேர்ந்த திருவாளர்கள் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகியோர் புதுடிலலி அழைக்கப்பட்டிருந்நது தெரிந்ததே.

நேற்றுப்பிற்பகல்வரை நடந்த இப்பேச்சு வார்த்தைகள் பற்றி த வி. கூ. பிரதிநிதிஒருவர் பத்திரிகையாளர்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில் பேச்சுவார்த்தைகள் சுமுகமானமுறையில் நடைபெற்றதாகவும், இப்பேச்சுக்களின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்துமீளாய்வு செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும், பிரச்சனைக்குத்தீர்வுகாண இந்தியாதெரிவித்துள்ள ஆலோசனைகளைச் செவிமடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததாகவும் கூறினார்.

தவி கூ உறுப்பினர்கள் இன்றும் புதுடில்லியில்தங்கியிருந்து பலசுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஈரோஸ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்திய அரசுடனான பேச்சுக்களில் பங்குபற்ற நாளை 20ந் திகதி புதுடில்லி அழைக்கப்படலாம் எனஇந்திய அரசவட்டாரங்கள்தெரிவித்தன. [ஊ]


சீமெந்து கூட்டுத்தாபனம்
காங்கேசன்துறை
அறிவித்தல்

சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் குடியிருப்புக்களில் வதிவிருந்த பிரதான குடியிருப்பாளர்கள், இம் மாதம் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை அல்லது 20-ம் திகதி புதன்கிழமை காலை 8-00 மணிக்கு முன் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் காரியாலய ஒழுங்கையில் வசிக்கும் சேமநல உத்தியோகத்தரை (Welfare officer) சந்திக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

முகாமையாளர்.
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை. ஏ-011



இடமாற்றம்
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

பிடவை ஸ்தாபனம் தற்போதைய சூழ்நிலை காரணமாக
இல. 424, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில் முன்பாக, வீடியோ பிரசாத்துக்கு அருகாமையில்)
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பங்காளர்கள்.

[சி-9151]


## அமெரிக்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும், கப்பல் பிழையாக அடையாளம் காணப்பட்டதாலேயே இத்தவறு நேர்ந்துள்ளதென்றும் ஈராக் தெரிவித்துள்ளது. அமெரிக்கா இத்தாக்குதலையிட்டுத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

கப்பலிலிருந்து 600 பேர்காப்பாற்றப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

வளைகுடாவில் பிரயாணத்தை மேற்கொள்ளும் கப்பல்கள்மீது ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளும் தாக்குதல் நடத்திவருவது தெரிந்ததே. [ஊ]

## சட்டவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா (வயது 43) என்பவராவார்.

மின்சாரத்தால் தாக்கப்பட்ட இவரை உறவினர்கள் ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர் அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார்.


## 'சியாய் மாச்செட்டி'

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னங்களின் பிரதான தளத்தை அநுராதபுரத்தில் அமைக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றின் பைலட்டுகளுக்கும் இங்குவைத்தே பயிற்சி யளிக்கப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது.

இயந்திரத் துப்பாக்கி மற்றும் ஏவுகணைகளை இவ்விமானங்களில் பொருத்துமிடத்து இவற்றை எவ்வேளையிலும் தாக்குதலுக்குப் பயன்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது இவை குறித்த சில நேரத்தில் மட்டுமே குண்டுவீச்சில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நாகரத்தினம் லோகேஸ்வரன்
[ராஜன்]
நியூ லெட்சுமி ஜுவலர்ஸ் உரிமையாளர்

அன்னை மடியில்:
15 - 07 - 1966
ஆண்டவன் அடியில்:
29 - 05 - 1986

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எங்கள் எல்லோரையும் பெருமை கொள்ளச் செய்து விட்டு அரக்கர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட அன்புச் செல்வமே உமது ஆச்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி, மகன் நவரூபன், தாய், சகோதரர்கள்.
மண்கும்பான் மேற்கு, வேலணை.

[சி 9171]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 19 5-87

## மின்சாரம் சீரானது

யாழ்ப்பாணம், திங்கள்

அநுராதபுரம்-சுன்னாகம் 132 கி.வோல்ட் மின்மார்க்கத்தில் காணப்பட்ட தடை விரைவாக சீர் செய்யப்பட்டதையடுத்து வடபகுதியில் நேற்றுமுதல் மின்சாரம் வழமைக்குத் திரும்பி விட்டது

கடந்த 15ந் திகதி முதல் இன்றுவரை மின்சாரகோபுர திருத்தவேலைகள் காரணமாக காலை ஏழுமணிமுதல் மாலை 5 மணிவரை மின்சாரம்தடைப்படுமென யாழ் பிரதேச மின்சாரசபை ஏற்கனவேஅறிவித்திருந்தது தெரிந்ததே.

### படையினர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பொம்மர் விமானமொன்று இப்பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. [ஒ]

# யாழ். வரமுடியாத நிலையில் ஆனையிறவு, பரந்தனில் நூற்றுக் கணக்கில் பயணிகள், வாகனங்கள் தஞ்சம்!

[ஏ தேவராசா]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் லொறிகள்,பஸ் வண்டிகள் கடந்த சனிக்கிழமை முதல் ஆனையிறவைத் தாண்டிச் செல்வதை ராணுவத்தினர் தடைசெய்துள்ளதால் ஆயிரக்கணக்கான பயணிகள் பரந்தன், கிளிநொச்சி முருகண்டி ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். பல நூற்றுக்கணக்கான லொறிகளும் பஸ்களும் இந்த இடங்களில் தரித்து நின்றன.

கடந்த ஞாயிறன்று ஆனையிறவு தடைமுகாமுக்குவந்த வாகனங்கள் பிற்பகல் மூன்றரை மணிவரை தடுத்துவைக்கப்பட்டபின் மீண்டும் பரந்தன் நோக்கி செல்லுமாறு பணிக்கப்பட்டன.

இதனையடுத்து திரும்பிய வாகனங்களின் பயணிகள் உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகிய இடங்களில் தஞ்சமடைந்தனர்.

### நேற்று

நேற்றுக் காலை மீண்டும் பல வாகனங்கள் ஆனையிறவை நோக்கிவந்தன. ஆனல் 9 மணி வரை தடைமுகாம் துறக்கப்படவில்லை.

9 மணயளவில் திடீரென முகாம் பகுதியிலிருந்து குறிஞ்சாத்தீவு நோக்கி ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் சுமார் 500 சிப்பாய்கள் குறிஞ்சாத்தீவு நோக்கிச் சென்றனர்

ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் நிற்கும் பயணிகளுள் பெரும்பாலானேர் கொழும்பிலிருந்து வந்தவர்களாவர். மட்டுநகர் பல்கலைகழகம் மூடப்பட்டதையடுத்து யாழ். வந்த மாணவர்களும் இங்கு நிற்கின்றனர். சில பஸ்கள் மீண்டும் கொழும்பு திரும்பின.

### சிறந்த சேவை

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் தஞ்சமடைந்துள்ளபயணிகளுக்கு அங்குள்ள சிற்றுண்டிச்சாலை நடத்துபவர்கள் சிறந்தசேவையாற்றி வருகின்றனர். மலிவு விலையில் இப்பயணிகளுக்குத் தேவையான உணவுவகைகள் இங்கு விற்கப்படுகின்றன. அத்துடன் இவர்கள் இங்குதங்குவதற்குரிய வசதிகளும் குளியல் மலசலகூடவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து பயணிகள் பெரிதும் பாராட்டினர்.

நேற்றையதினம் இங்கு தரித்துநின்ற பயணிகளில்பலர் மாற்றுவழிகளூடாக யாழ்ப்பாணம்வந்தடைந்தனர். [ஊ]

## ஹெலி, பொம்மர் தாக்குதலில் ஒருவர் பலி! லொறி பலத்த சேதம்

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாயில் நேற்றுமாலை இடம்பெற்ற ஹெலி, பொம்மர் தாக்குதலின்போது ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புசென்ற லொறி தொடர்ந்து செல்ல முடியாது திரும்பிவரும்போது கோப்பாய் பாலத்தைக் கடந்து சந்திக்கு அண்மையாக வரும்போது இயந்திரக்கோளாறு காரணமாக வழியில் நிறுத்தப்பட்டிருந்தது அப்போதுஅங்கு வந்த ஹெலிகாப்டர் லொறியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. தொடர்ந்து பொம்மர் விமானமொன்றும் அவ்விடத்திற்குவந்து இரண்டு தடவை குண்டு வீசியது. இதனுல் படுகாயமடைந்த நாவாந்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகராசா (29 வயது) லொறிக் கிளினர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர். லொறியும்பலத்த சேதமடைந்துள்ளது

இத்தாக்குதலின்போது அண்மையிலுள்ள வீடொன்றும்சேதத்திற்குள்ளானது [கு]

## ஆஸ்பத்திரி சமாதானவலயப் பேச்சு: அரசதரப்பில் எதுவித மாற்றமுமில்லை!

### – பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், செவ்

யாழ் போதனு வைத்தியசாலைப் பகுதியை சமாதான வலயமாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக கொழும்பு சென்ற யாழ் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் நச்சினுர்க்கினியன் தலைமையிலான குழு நேற்று யாழ்ப்பாணம் திரும்பியது.

இக்குழுவினர் தேசிய பாதுகாப்பு அமைச்சர்லலித் அத்துலத்முதலியை கடந்தவெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இவ்வலயம் சம்பந்தமாக பேசசு நடத்த போராளிகள் சில நிபந்தனைகளை முன்வைத்தனர்.

யாழ் ஆஸ்பத்திரி சமாதான வலயம் சம்பந்தமாக போராளிகள் தெரிவித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ள அ.சு. சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளல்லாமல் உள்ளூர் பிரதிநிதிகள் எவரும் இச்சமாதான வலயம் குறித்த பேச்சுக்களில் கலந்து கொள்வதை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக லலித் அத்துலத் முதலி யாழ் ஆஸ்பத்திரி குழுவிடம் தெரிவித்ததாக டாக்டர் நச்சினுர்கினியன் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி சமாதான வலயம் குறித்த பேச்சுக்களில் அரசதரப்பு நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை எனவும்அவர் மேலும்தெரிவித்தார். (ஒ)

## தமிழ் இளைஞருக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு திங்கள்

இலங்கைக்குள் 250 கிராம் ஹெரோய்ன் போதைவஸ்தைக் கடத்திவர முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவருக்கு நீர்கொழும்பு உயர்நீ மன்றம் ஆயுள்தண்டனை அளித்துள்ளது.

வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் என்ற பிரஸ்தாப இளைஞர் கடந்தவருடம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போதைவஸ்துக் கடத்திவந்தாரென 'லங்காபுவத்' தெரிவித்துள்ளது. (ஊ)

## முல்லைத்தீவில் கொள்ளைக் கோஷ்டி போராளிகளால் கைது!

(ஒட்டுசுட்டான் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வீடுகளில் ஆயுதம் தாங்கி கொள்ளை அடித்து வருபவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

மேலும் இக்கொள்ளை கோஷ்டியினரின் சகாக்களையும் கைது செய்வதற்த தீவிர தேடுதலில் புலிகள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்கள் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் உறுப்பினர்களென்றும் சொல்லப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் போராளிகள் பாசறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வவனியா செல்லத் தவறியவர்கள் விலாசம் பொலிஸ்மா அதிபரால் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், செவ்

வவனியாவிற்கு செல்லத் தவறியபொலிஸ் சம்பளக்கிளை உத்தியோகத்தர்களின் சொந்த விலாசம் நேற்று பொலிஸ்மாஅதிபரினுல் திரட்டப்பட்டுள்ளது.

கடந்த 5ம் திகதி கடமையிலிருந்து திரும்பிய பொலிஸ்காரர்ஒருவரை இராணுவம் சுட்டுக்காயம் விளைவித்ததைத் தொடர்ந்து தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சகலரும் பொலிஸ் நிலையத்திற்குகடமைக்குச்செல்லாது தமக்குத் தகுந்த பாதுகாப்புவழங்கும்படி கோரியிருந்தனர்.

இதுவ்வாறிருக்க சம்பளக்கிளை உத்தியோகத்தர்களை வவனியா பொலிஸ்நிலையத்திற்கு வரும்படி யாழ்பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு கொடுத்திருந்தார். அதைத் தொடர்ந்து குடாநாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இவர்கள் வவனியாவிற்கு செல்ல முடியாதிருந்தது.

நேற்று இந்த உத்தியோகத்தர்களின் சொந்த விலாசம் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் யாழ். பொலிஸ் அத்தியட்சகரால் திரட்டப்பட்டுள்ளது. (கு)

### வடபகுதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திணைக்களத்திற்கு நாலரை லட்சம் ரூபாய் சேதமேற்பட்டுள்ளது

இச்சம்பவம் ஒரு நாசவேலையாக இருக்குமோவென்பதை அறிய தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [ஊ]

## மரண அறிவித்தல்

### எஸ். எம். அருளப்பு (நாரந்தனை)

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். எம். அருளப்பு காலமாகிவிட்டார். அன்னுர் மேரி திரேசாவின் அன்புக் கணவரும், தேக்ளா, காலஞ்சென்ற அலெக்ஸ், றூபினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற எஸ். எம் சவிரிமுத்துவின் அன்புத் தம்பியும் திருமதி பெலிசிற்ரஸ் ஜேம்ஸ்சின் மைத்துனருமாவார். அன்னுரின் நல்லடக்கம் 19-5-1987 [இன்று] செவ்வாய்க்கிழமை மாலை 3மணியளவில் நாரந்தனையில் நடைபெறும். (சி-9168

### செல்வநாயகி நடராசா

**பன்னுலையைப் பிறப்பிட**மாகக் கொண்ட திருமதி செல்வநாயகி நடராசா 1987-05-18 திங்கள்காலை சிவபதமடைந்துவிட்டார்கள். அன்னுர் கொழும்பு வர்த்தகர் திரு. வி. நடராசா அவர்களின் அன்பு மனைவியும், பாலயோகேஸ்வரி, தனபாலன் [மின்பொறியியலாளர், இலங்கை மின்சார சபை], சிவபாலன் (அவுஸ்திரேலியா), பாலசிவனேஸ்வரி [ஆசிரியர், அனலைதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா [போதனுசிரியர், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி], ஜெயக்குமாரி, மனேகரன் [ஆசிரியர், அனலைதீவு)ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னுரின் ஈமக்கிரியைகள் கொப்பிலாவடை மயானத்தில் 18-5-87 நேற்றுமாலை நடைபெற்றது. இச்செய்தியை உற்ருர்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்களாக.

தகவல்: நடராசா.

பன்னுலை, தெல்லிப்பளை.
1987 05-19. [சி-9173]

### சுப்பிரமணியம் பொன்னையாபிள்ளை

முன்னுள் கொழும்பு வர்த்தகரும், சிறுப்பிட்டியைச் சோந்தவருமான மாவிட்டபுரம் புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் பொன்னையாபிள்ளை நேற்று [18-05-1987] காலமானுர். இவர் காலம்சென்ற செல்லம்மாவின அன்புக் கணவரும், திருமதி யோகேஸ்வரி, திருமதி கமலாம்பிகை [உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சு], ஞானும்பிகை, யோகராசா (மீரோ இன்டஸ்றீஸ்), டாக்டர் செல்வராணி (பம்பலப்பிட்டி), ஸ்ரீஸ்கந்ததேவி (நூலகர், தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தகப்பனுரும், காலஞ்சென்ற குலேந்திரராஜா, செல்வராசா (அபுதாபி) ஆகியோரின் அருமை மாமனுரும், நிலக்ஷி லதா, குமரன், பவானி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
(சி-9163) பொ. ஸ்ரீஸ்கந்ததேவி (மகள்)

### சி. வெற்றிவேலு ஈமக்கிரியை அறிவித்தல்

16-5-1987 அன்று இறைபதம் எய்திய சின்னப்பிள்ளை வெற்றிவேலு அவர்களின் ஈமக்கிரியைகள் 9-5-1987 செவ்வாய்க்கிழமை இன்று பிற்பகல் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று 3-00 மணியளவில் திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர் உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டுகிறேன்.

தகவல்: வெ. சபாநாயகம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (சி-9174)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu Telephone: — 22389 24126